**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 440/2020 P.W. 2/L.W.2 u/s. 244 crpc**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. இருதயராஜ்** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. சிங்காராஜன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 05.10.2023.**

**புகார்தாரர்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர் விலக்களிக்கப்பட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். மனுதாரர் மரிய நேசத்தையும், எதிர்மனுதாரர் ரமேஷ்சையும் எனக்கு தெரியும். 05.01.2019 ம் தேதி சர்ச்சில் வைத்து கொத்தனார் வேலைச் செய்யகேட்டார்கள். சனிக்கிழமை வேலைக்கு வரமுடியாது, ஞாயிற்றுக்கிழமை கல்யாண வீடு இருக்கிறது என்று சொன்னேன். 05.01.2019 ம் தேதி இரவு வேணும்னா செய்து தருகிறேன் என்று சொன்னேன் அதற்கு சரி என்று சொன்னார்கள். கையாளுக்கு கோவிந்தன் மகன் கிறிஸ்டினை அழைத்துச் சென்றேன். 06.00 மணி அளவில் வேலையை தொடங்கினேன். இரவு 01.30 மணி அளவில் சுமார் 7 அடி உயரம் வரை கட்டிவிட்டேன்.

2. அப்போது எதிர்மனுதாரர் ரமேஷ்குமார் காம்புண்ட் சுவர்ஏறிவந்து தேவடியாமகனே என்று என்னை திட்டினார். மரிய நேசத்தின் மகன் டீ போடுவதற்காக வீட்டிற்கு சென்றிருந்தான். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே வாய்தகராறு நடந்தது. நாங்கள் கொஞ்சம் தள்ளி நின்றோம். மட்டம் பார்க்கும் கட்டையை வைத்து சுவரை இடித்து தள்ளிவிட்டார். சுவர் கீழே விழுந்து விட்டது. அதில் ஒரு சிமிண்ட் கல்லை எடுத்து தேவடியா மகளே என்று சொல்லி செத்து ஒழிந்து போ என்று தூக்கிபோட்டார். அப்போது மனுதாரர் கையை வைத்து தடுத்ததில் அந்த கல் இடது

காலில் விழுந்து இரத்தம் வந்தது. நாங்கள் சத்தம் போட்டவுடன் காப்பி போட போன பையன் வந்துவிட்டான். நாங்கள் திருப்பி மாறி மாறி சத்தம் போடவும் ரமேஷ்குமார் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம்.

குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.